வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3451/ஆ5/2024, நாள்.18/02/2025

.....

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2024–2025ஆம் கல்வியாண்டு – கல்வி இணை / கல்வி சாரா மன்ற செயல்பாடுகள் – அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9ஆம் வகுப்பு வைர பயிலும் மாணவர்களுக்கான சிறார் திரைப்படம் போட்டிகள் – வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான போட்டிகள் நடைபெறுதல் – சார்பாக

பார்வை
1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34785/எம் /இ1/2023, நாள். 03.02.2025
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34785/எம் /இ1/2023, நாள். 10.02.2025
3. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34785/எம் /இ1/2023, நாள். 13.02.2025
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 13.02.2025

.....

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்தில் 2024–2025ஆம் ஆண்டில் நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்கான சிறார் திரைப்படம் 6 முதல் 9ம் வகுப்பு வைர (வரை) படிக்கும் மாணவர்களுக்கு திரையிடப்பட்டது. இதைன தொடர்ந்து சிறார் திரைப்படம் திரையிடல் சார்ந்த வட்டார அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் முதல் இடத்தில் வெற்றிப் பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்குபெற செய்யுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| போட்டி நடைபெறும் இடம் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர் |
| நாள் மற்றும் நேரம் | 20.02.2025 காலை10.00 மணி முதல் |

போட்டிகளில் கலந்து கொள்ள வரும் மாணவர்கள் நடப்பிலுள்ள தங்களது வங்கி சேமிப்பு கணக்குப் புத்தகத்தின் முதல் பக்கத்தின் தெளிவான நகலினை கட்டாயம் கொண்டுவர கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு –
1. வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம்
2. பார்வை 1ன் செயல்முறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) வேலூர் மாவட்டம்.
(இவ்லுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. மாவட்ட உதவி திட்ட அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
4. சார்ந்த அரசு நடுநிலை / உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசியர்கள்,
வேலூர் மாவட்டம்.
5. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
(மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மூலமாக)
6. பள்ளித் துணை ஆய்வாளர்கள்,
(முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை)
வேலூர் மாவட்டம். (சார்ந்த அலுவலர் மூலமாக)

நகல் –
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்,
ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்
(போதிய வசதி செய்து தர தெரிவிக்கப்படுகிறது)

## சிறார் திரைப்படம் திரையிடல் போட்டிகள் – (District Level Competition)

| வ. எண் | போட்டிகள் | கால அளவு | மதிப்பெண்கள் வழங்குவதற்கான கூறுகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | கதை & வசனம் | | | | | |
| | இயற்கை பாதுகாப்பிற்காக வசனத்துடன் கூடிய 3 நிமிட படக்கதையை எழுதுதல். | 45 நிமிடங்கள் | திரைப்படத்தின் கருப்பொருள் மற்றும் பொருளடக்கம் (30 மதிப்பெண்கள்) | கதை மாந்தர்களை உருவாக்குதல் மற்றும் வளர்த்தல் (25 மதிப்பெண்கள்) | கதையோட்டம் (20 மதிப்பெண்கள்) | வசன நேர்த்தி (25 மதிப்பெண்கள்) |
| 2 | ஒளிப்பதிவு | | | | | |
| | புத்தக வாசிப்பு பற்றிய 2 நிமிட திரைப்படக் கதை உருவாக்கல் | 1 மணி 30 நிமிடங்கள்<br><br>ஒளிப்பதிவு செய்யப்பட்ட விஷயங்களை எடிட் செய்து, இசை சேர்த்து (தேவைப் பட்டால் மட்டும்) கொடுக்கப்பட்டுள்ள ஒன்றரை மணி நேரங்களுக்குள் அனைத்தையும் முடிக்க வேண்டும் | காட்சித்தரம் (நிலையான சட்டகம் (Static shot), ஓடும் சட்டகம் (Running shot), ஜூம் உள்ளே (Zoom-In), காட்சி திருப்பம் (Visual-Plan) (25 மதிப்பெண்கள்) | ஒளிப்பதிவிற்கான விளக்குகள் பயன்பாடு (இயற்கை – Natural, செயற்கை –Artificial, அறைகளில் – Room)<br><br>(25 மதிப்பெண்கள்) | எப்படி கதை மற்றும் கருத்தை சொல்வது.<br><br>(25 மதிப்பெண்கள்) | ஒளிப்பதிவு கருவியின் கோணங்கள் வழியாக உணர்வுகளை கடத்துவது (விரிந்த (Wide angle), இடை (Mid-angle), அருகில் (Close-up)<br><br>(25 மதிப்பெண்கள்) |
| 3 | நடிப்பு | | | | | |
| | மாற்றுத்திறனாளியான ஒருவர் கூட்டம் நிறைந்த சந்தையில் தனக்குத்தானே செயல்படத் தேவையானதை பூர்த்தி செய்ய காட்சி அமைத்து 3 நிமிடம் நடித்தல் | 45 நிமிடங்கள்<br><br>(தனி நபராக நடிக்கின்ற மாணவரோடு மற்ற நபர்கள் யார் நடித்தாலும் மதிப்பெண் தனி நபராக நடிக்கும் மாணவருக்கு மட்டும் வழங்கப்படும்) | உணர்வுகளை சிறப்பாக வெளிக் கொணர்தல் – (30 மதிப்பெண்கள்) | கதை மாந்தர்களை குறிப்பிடுவது (25 மதிப்பெண்கள்) | காட்சிகளுக்கு தகுந்தாற் போல குரலை சரியாக பயன்படுத்துவது (20 மதிப்பெண்கள்) | இடத்தை சரியாக பயன்படுத்துவது கதாபாத்திரத்தை உணர்ந்து நடிப்பது (25 மதிப்பெண்கள்) |